சுருக்கம்

தொடக்கக் கல்வி – ரிட்மனு எண். 8079/2006-ல் சென்னை உயர்நீதி மன்றம் வழங்கிய 28.04.2006 நாளிட்ட தீர்ப்பின் அடிப்படையில் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தேர்வுநிலை/சிறப்புநிலை நிர்ணயம் செய்து திருத்திய ஓய்வூதியப் பலன்கள் அனுமதித்தல் -ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (ஜி2)துறை

அரசாணை (நிலை) எண். 207 நாள் 30.09.2008

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.1381 கல்வித்துறை நாள் 05.10.1990.
2. அரசாணை (நிலை) எண்.300 கல்வித்துறை நாள் 07.04.1994.
3. அரசாணை (நிலை) எண்.212 கல்வித்துறை நாள் 07.02.2000.
4. அரசாணை(நிலை)எண்.38 கல்வித்துறை நாள்05.03. 2001.
5. அரசாணை (நிலை) எண். 185 பள்ளிக் கல்வித் துறை நாள் 16.12.2002.
6. அரசாணை (நிலை) எண். 160 பள்ளிக் கல்வித் துறை நாள் 23.08.2005.
7. உயர் நீதிமன்ற வழக்கு டபுள்யுபி எண். 8079/2006 மற்றும் டபிள்யு எம்.பி.எண்.9014/2006ல் ஆணை நாள் 28.04.2006
8 தொடக்கக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.17049/எல்1/2006, நாள் 16.02.2007, 15.03.2007, 23.03.2007 மற்றும் நாள் 24.07.2008.

*****

**ஆணை**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 01.06.88-க்கு முன் இடைநிலை ஆசிரியர் பதவிக்கும், தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பதவிக்கும் ஒரே ஊதிய விகிதம் இருந்ததால் 01.06.88 அன்று தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர்களாகப் பணியில் இருந்தவர்களுக்கு இடைநிலை ஆசிரியர் பணிக்காலத்தையும் கணக்கில் கொண்டு தலைமை ஆசிரியர் பணியில் தேர்வு நிலை/சிறப்பு நிலை வழங்குவது குறித்து அரசாணை வெளியிடப்பட்டது. மேற்படி அரசாணையை எதிர்த்து தொடரப்பட்ட வழக்குகளில், தமிழ் நாடு நிர்வாகத் தீர்ப்பாயம் பிறப்பித்த ஆணையின் அடிப்படையில் மீண்டும் ஆய்வு செய்த பின்னர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பதவியில் பணியாற்றிய காலத்தை மட்டும் கணக்கில் கொண்டு தலைமையாசிரியர் பதவியில் தேர்வு நிலை / சிறப்பு நிலை வழங்க வேண்டும் என ஆணையிடப்பட்டது.

2. தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்கள் சார்பில் மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வழங்கப்பட்ட தவறான சலுகைகளை தக்கவைத்துக் கொள்ள சென்னை உயர்நீதி மன்றத்தில் பல்வேறு வழக்குகளில் முறையீடு செய்யப்பட்டன. இந்த வழக்குகளில் 18.4.2001 ஆம் நாளன்று சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் அனைத்து அம்சங்களையும் மீள ஆய்வு செய்து மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கீழ்க்கண்ட மூன்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன:-

i) 1.6.88 அன்று தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்களாக உள்ளவர்களில், 1.6.88-க்கு முன்னர் தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்திருப்பின், அக்காலத்தை தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்

பதவியில் தேர்வு நிலை/சிறப்பு நிலை வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளலாம்.

ii) 1.6.88-க்குப் பிறகு தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டவர்கள் பொறுத்தவரை அரசாணை (நிலை) எண்.212 பள்ளிக் கல்வி நாள் 7.8.2000 நாளிட்ட ஆணையின்படி தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவியில் தேர்வு நிலை/ சிறப்பு நிலை வழங்கி ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

iii) ஏற்கனவே 1.6.88 அன்று தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்து, அரசாணை (நிலை) எண். 1381 கல்வி நாள் 5.10.90-ன்படி தேர்வு நிலை/சிறப்பு நிலை வழங்கப்பட்டவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் பெற்று வந்த ஊதியத்தில் இழப்பு ஏற்படாத வண்ணம், அதன் இணைப்பில் தெரிவிக்கப்பட்ட மாதிரி (Model) ஊதிய நிர்ணயத்தின்படி ஊதியம் மறு நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

3. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையை எதிர்த்து ஆசிரியர் சங்கங்கள் வழக்கு தொடுத்தனர். இவ்வழக்கு நிலுவையில் இருந்த நிலையில், மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடப் பட்டன:-

(i) <u>1.6.88 அன்று தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்களாக பணிபுரிந்து, 1.8.2005-க்குப் பிறகும் தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர்களாக தொடர்ந்து பணிபுரிபவர்களைப் பொறுத்தவரை :-</u>

1.8.2005 அன்று உள்ளவாறு அவர்கள் தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர்களாக பணிபுரிந்த காலத்தினை மட்டும் கணக்கில் கொண்டு தேர்வு நிலை/ சிறப்பு நிலை கணக்கிடலாம். 1.8.2005 அன்று அவர்கள் பெற்று வந்த அடிப்படை ஊதியத்தினை அவர்களுக்கு தகுதியுள்ள தேர்வு நிலை/சிறப்பு நிலையில் பொருத்தலாம். அவ்வாறு பொருத்துவதற்கான ஊதியநிலை (Stage) தேர்வு நிலை/சிறப்பு நிலையில் இல்லையெனில், அதற்கு முந்தைய நிலையில் (Lower Stage) பொருத்தி வேறுபடும் மீதமுள்ள ஊதியத்தினை தனி ஊதியமாக (Personal Pay) அவர்கள் ஓய்வு பெறும் வரையில் அனுமதிக்கலாம்.

(ii) <u>1.6.1988 அன்று தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்களாக பணிபுரிந்து 1.8.2005-க்கு முன்னதாக ஓய்வு பெற்றவர்களைப் பொறுத்தவரை</u>:-

சிறப்பு நிகழ்வாக, அவர்கள் ஓய்வு பெற்றபோது இறுதியாக பெற்றிருந்த அடிப்படை ஊதியத்தின் அடிப்படையில் ஓய்வூதியம் நிர்ணயம் செய்யப்படலாம். அவர்களது தேர்வு நிலை/சிறப்பு நிலை மறுபடியும் திருத்தி நிர்ணயம் செய்ய வேண்டியதில்லை.

(iii) அரசாணை (நிலை) எண். 1381, கல்வி, நாள் 5.10.90 ஏற்கனவே நீதிமன்றத்தால் இரத்து செய்யப்பட்டு திருத்திய ஆணை வெளியிடப்பட்டதால், அவ்வாணையின் அடிப்படையில் இனி எந்த ஒரு தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியருக்கும் புதிதாக மறு ஊதிய நிர்ணயம் செய்யக் கூடாது.

(சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள ரிட் மனுக்களின் தொகுப்பு வழக்குகளின் இறுதி ஆணைக்கு உட்பட்டு இத்தெளிவுரை வழங்கப்படுகிறது).

4. இடைநிலை ஆசிரியர் பதவியிலிருந்து பி.டி. பட்டதாரி ஆசிரியர்/தமிழ் ஆசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு எவ்வாறு தேர்வுநிலை/சிறப்பு நிலை வழங்கவேண்டும் என்பது குறித்து பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையால் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண். 210 நாள் 11.03.87-ன் அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.238, பள்ளிக் கல்வித் துறை, நாள்.26.6.98ல் ஆணைகள் வெளியிடப்பட்டது. இந்த ஆணைகள் தொடக்கக் கல்வித்துறையில் உள்ள தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என அரசாணை (நிலை) எண்.212, பள்ளிக்கல்வித்துறை, நாள்.7.8.2000-ல் ஆணைகள் வெளியிடப்பட்டது. அரசாணை (நிலை) எண்.212, பள்ளிக்கல்வித் துறை, நாள் 7.8.2000-த்தினை எவ்வாறு செயல்படுத்துவது என்பதற்கான மாதிரி ஊதிய நிர்ணயப் பட்டியல் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட ஆணையில் வெளியிடப்பட்டது.

5. இந்நிலையில், தமிழ் நாடு ஆசிரியர் கூட்டணி, ரிட் மனு எண். 8079/2006 –ஐ சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது, இவ் வழக்கில் 28.4.2006 அன்று சென்னை உயர்நீதிமன்றம் கீழ்க்கண்ட தீர்ப்பினை அளித்துள்ளது.

“ In view of the above, the Writ petition is allowed and the respondents are directed to settle the retirement benefits of the members of the petitioner Kottani on the basis of G.O.Ms.No.185 School Education Department, dated 16.12.2002 and G.O. Ms.No.160, School Education Department dated 23.08.2005” and without reference to G.O.Ms No. 38 School Education dated 05.03.2001.

6. மேற்கண்ட நிலையில் தொடக்கக் கல்வி இயக்குநர் தனது கடிதத்தில் 28.04.2006 ஆம் நாளன்று சென்னை உயர்நீதி மன்றத்தில் மனுதாரர்கள் பெற்றுள்ள தீர்ப்பாணைக்கு ஏற்ப அரசாணை (நிலை) எண். 38 பள்ளிக்கல்வி நாள் 05.03.2001-ல் உள்ள ஆணைகளை கணக்கில் கொள்ளாமல், அரசாணை (நிலை) எண். 185, பள்ளிக் கல்வி நாள் 16.12.2002 மற்றும் அரசாணை (நிலை) எண். 160 பள்ளிக் கல்வி நாள் 23.08.2005 ஆகிய அரசாணைகளை பயன்படுத்தி ஊதிய நிர்ணயம் செய்து திருத்திய ஓய்வூதிய பலன்கள் பெற ஆணை வெளியிடலாம் எனவும் இவ்வாணையை செயல்படுத்தினால் ஏற்படும் கூடுதல் செலவினம் அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் மூலமாக விவரம் பெற்று தொகுத்து கணக்கிட்டு தோராயமாக ரூ.1,57,93,225/- செலவாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

7. இதனை அரசு நன்கு ஆய்வு செய்து உயர்நீதி மன்ற தீர்ப்பின் அடிப்படையில் மேலே பத்தி 6-ல் உள்ள தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, அதன்படி அரசாணை (நிலை) எண். 38 பள்ளிக்கல்வி நாள். 05.03.2001ல் உள்ள ஆணைகளை கணக்கில் கொள்ளாமல் அரசாணை (நிலை) எண். 185, பள்ளிக் கல்வி நாள் 16.12.2002 மற்றும் அரசாணை (நிலை) எண். 160 பள்ளிக்கல்வி நாள் 23.08.2005 ஆகிய அரசாணைகளை பயன்படுத்தி 01.06.88க்கு பின்பு தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெற்றவர்களுக்கு தேர்வு நிலை/சிறப்புநிலை வழங்கி ஊதிய நிர்ணயம் செய்து திருத்திய ஓய்வூதியப் பலன்கள் பெற அனுமதித்து அரசு ஆணை வெளியிடுகிறது.

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.227/DS(RC)/2008, நாள் 29.09.2008 ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6
அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள்
(தொடக்கக் கல்வி இயக்குநர் வழியாக)
மாநில கணக்காயர், சென்னை-18
மாநில கணக்காயர், சென்னை-18 (பெயரில்)
சம்பளம் (ம) கணக்கு இயக்குநர், சென்னை-35
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
நிதி (கல்வி-II) துறை, சென்னை-9
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, சென்னை-9
பள்ளிக் கல்வி ( பி.சி.எஸ். வரவுசெலவு) துறை, சென்னை-9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்